# பாடம் 8

## (Subject and Object Pronouns)
## எழுவாயும், மாற்றுப் பெயர்களின் வேற்றுமை வடிவங்களும்

ஆங்கிலத்தில் இரண்டு வகையான மாற்றுப்பெயர்கள் உண்டு. அவை, எழுவாய் மாற்றுப்பெயர்களும் மாற்றுப்பெயர்களின் வேற்றுமை வடிவங்களுமாகும். ஆனால், கவலைப்பட வேண்டாம். இதில் எந்தவிதக் கஷ்டமும் இல்லை. சின்ன வித்தியாசமே உண்டு. பின்வரும் உதாரணங்களைப் பாருங்கள்:

(1) I am Sri Lankan.
நான் இலங்கையன்.

இந்த உதாரணத்தில், எழுவாய் (அதாவது, செயலைச் செய்பவர்) நான் - **I**. இந்த வாக்கியத்தில், வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயர் இல்லை.

(2) He plays tennis every morning.
ஒவ்வொரு காலையிலும், அவர் டெனிஸ் விளையாடுவான்.

இந்த வாக்கியத்தில் எழுவாய், அவர் **He**. இந்த வாக்கியத்திலும் வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயர் இல்லை.

வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயர் இடம்பெற்றுள்ள சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

I see **them.**
நான் அவர்களைக் காண்கின்றேன்.

நான், அதாவது, **I** என்பது எழுவாய். (செயலைச் செய்பவர்.) **them** என்பது, வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயர்.

Kumaran writes **him** a letter.
குமரன், அவருக்கு ஒரு கடிதம் எழுதுகிறார்.

Kumaran எழுவாய்; **him**வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயர்.

ஆங்கிலத்தில், எழுவாய் மாற்றுப்பெயர்கள் மாற்றமடைவதில்லை. ஆனால், வேற்றுமை வடிவங்களைக் கொண்ட மாற்றுப்பெயர்கள் மாற்றமடையும்

| **Subject Pronoun**<br>**எழுவாய்சார்ந்த மாற்றுப்பெயர்கள்** | **Object Pronouns**<br>**வேற்றுமை வடிவங்களைக் கொண்ட மாற்றுப்பெயர்கள்** |
|---|---|
| I | Me |
| You | You |
| He | Him |
| She | Her |
| It | It |
| We | Us |
| They | Them |

உதாரணங்கள்:

**I** write to **her** once a month.
ஒரு மாதத்திற்கு ஒரு தடவை, நான் அவருக்குக் கடிதம் எழுதுவேன்.

இவ்வாக்கியத்தில், **I** என்பது எழுவாய். எனவே, அது மாறாது. எனவே, **She** என்பது, வேற்றுமை வடிவத்தைக் கொண்ட அதன் மாற்றுப்பெயரான **her** என்று மாற்றமடைகின்றது.

Can **he** help **us** with this problem?
இப்பிரச்சினை தொடர்பாக அவர் எங்களுக்கு உதவ இயலுமா?

**He** என்பது எழுவாய். எனவே, அது, மாற்றமடையாது. ஆனால், **we** என்பது, வேற்றுமை வடிவத்தைக் கொண்ட அதன் மாற்றுப்பெயரான **us** என்று மாற்றமடைகின்றது.

இது, சிக்கல் நிறைந்தது போலத் தோன்றினாலும், சுலபமானதே. இது, ஆங்கிலத்தில் மிக முக்கியமானதொரு எண்ணக்கருவாகும். எனவே, எழுவாய் மாற்றுப்பெயர், வேற்றுமை வடிவத்தைக் கொண்ட மாற்றுப்பெயராக எவ்விதம் மாற்றமடைகின்றது என்பதைக் கவனமாகப் படியுங்கள்; அவற்றை மனனம் செய்யுங்கள். பயிற்சித் தொகுதிகள் முழுவதையும் நீங்கள் செய்து, இம்முக்கியமான எண்ணக்கருவை முழுமையாக விளங்கிக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் ஆலோசனை கூறுகிறோம்.